மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்

Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


பேச்சுப் போட்டி 2024

# ஆண்டு 7

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம்

இன்றைய எனது தலைப்பு

## திருக்குறள் தரும் அறிவியல் விஞ்ஞானம்

அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பகுப்புக்களைக் கொண்ட திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 பாடல்களையும் உள்ளடக்கியுள்ளது.

நீரில் வாழும் தாவரங்கள் அதன் தண்ணீரின் அளவு நிலைக்கேற்ப தாவரங்களின் தண்டு உயர்ந்தும் குறைந்தும் காணப்படும் என விஞ்ஞானிகள் பதினெட்டாம் நூற்றாண்டில் கூறியதை இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"** – என்ற குறளில்,

இந்த உலகில் மனிதனின் உயர்வு என்பது அவனின் எண்ணத்தின் அடிப்படையாகவே இருக்கும், இதனால் மனிதனின் எண்ணம் உயர்வாகவே இருக்க வேண்டும் என்பதனையே வள்ளுவம் அறிவியல் தத்துவமாக உணர்த்துகின்றது.

**"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"** – என்ற குறளை நோக்கும்போது,

உ.ழவின் பெருமையை எடுத்துரைப்பதுடன் உலகம் கோளவடிவத்தில் சுழல்கிறது என்பதை பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே அறிவியல் விஞ்ஞானம் கூறியுள்ளது என்பது தெரிகின்றது.

மனிதனை அடிநிலையிலிருந்து உயர்நிலைக்கு எடுத்துச் செல்லும் திருக்குறள் அறிவியல் விஞ்ஞானம் நிறைந்த ஒரு பொதுமறை நூலாகத் திகழ்கின்றது. எனவே நாமும் திருக்குறளைப் படித்து பயன் பெறுவோமாக!!!



நன்றி
வணக்கம்


ஆக்கம்: ஆசிரியர் திருமதி. இராஜேஸ்வரி குலவீரசிங்கம்.
ஆசிரியர் திருமதி பிருந்தா பிரசன்னா